கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில்
எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட்
ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421,
94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ்
சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 150 | 05-12-2025 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 150 | 05-12-2025 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

# மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை கருணை அல்ல; உரிமை:

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: டிச.5–

சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நேற்று உலக மாற்றுத் திறனாளிகள் நாளை முன்னிட்டு நடந்த உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளி களுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழாவில் பங்கேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தமிழ்நாட்டு உள்ளாட்சி அமைப்புகளில், புதிய மக்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டிருக்கும் 3,631 மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகளை வருக, வருக என்று வரவேற்கிறேன். இப்போது நகர்ப்புறத்தில், 9 மாவட்ட கிராமப்புற உள்ளாட்சி அமைப்பு களில் நியமித்திருக் கிறோம். அடுத்து, மீதமுள்ள உள்ளாட்சி அமைப்புகள் அமையும் போது இன்னும் 9 ஆயிரத்திற்கும் மேல் அதிகாரம் பெற இருக்கிறீர்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு தேவை கருணை அல்ல; அவர்களின் 'உரிமை' என்பதை உணர்ந்து இன்றைக்கு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

*மாற்றுத்திறனாளிகள் பொருளாதார மேம்பாடு காண அரசு துறைகளில் உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு, 4 விழுக்காடு இடஒதுக்கீடு முறையில் வாய்ப்புகள் வழங்க உத்தரவிட்டி ருக்கிறோம்.

* தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக ஒவ்வொரு நிதியாண்டிலும் நிதி ஒதுக்கீட்டை உயர்த்திக்கொண்டே வருகிறோம். 202122ம் நிதியாண்டில், ரூ.813 கோடியே 63 லட்சம் ஒதுக்கீடு செய்தோம். 202526ம் நிதியாண்டில் ரூ.1,432 கோடியே 77 லட்சமாக உயர்த்தி இருக்கிறோம்.

*மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மட்டுமே இதுவரை 60க்கும் மேற்பட்ட அரசாணை களை பிறப்பித்திருக் கிறோம்.

* மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையை இருமடங்காக உயர்த்தி, 22 ஆயிரத்து 300 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.7 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து மாவட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி எத்தனையோ திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தக்கூடிய அரசு தான் உங்களுடைய திராவிட மாடல் அரசு என்பதை பெருமையோடு குறிப்பிடுகிறேன்.

இந்த வரிசையில்தான் மாற்றுத்திறனாளிகளின் அரசியல், சமூக உரிமையை நிலைநாட்டும் வகையில் முக்கியமான ஒரு சட்டத்தை கொண்டு வந்தோம். ஊராட்சி அமைப்புகள் ஒன்றிய அமைப்புகள் மாவட்ட அமைப்புகளில் இன்றைக்கு நீங்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதன் மூலமாக, சமூகத்தில் மக்களாட்சிக் கான உண்மையான பொருளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இனிமேல், நீங்கள், அரசு கொண்டு வரும் திட்டங் களின் பயனாளிகள் மட்டுமல்ல, அரசின் திட்டங்களில் உங்கள் குரலை பதிவுசெய்யப்போகும் மக்கள் பிரதிநிதிகள். மனுக்களை அளிக்க போகிறவர்கள் இல்லை நீங்கள்; மனுக்களை பெற்று தீர்வுகாண போகின்றவர்கள் நீங்கள்.

மக்கள் பிரதிநிதிகளாக நீங்கள் ஆற்றப்போகும் பணிகளைப் பார்த்து, இதை மற்ற மாநிலங்களிலும் முன்னெடுக்க வேண்டும். இதுதான், உண்மையான சமத்துவத்தையும் சமூகநீதியையும் நோக்கிய பயணமாக இருக்கும். உங்கள் பணி சிறக்க வெற்றி அடைய மனமார்ந்த வாழ்த்துகள். இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சி யில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, ராஜகண்ணப்பன், கீதா ஜீவன், மா.சுப்பிரமணி யன், டி.ஆர்.பி.ராஜா, மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், எம்எல்ஏக்கள் எழிலன், பரந்தாமன், தலைமை செயலாளர் முருகானந்தம், அரசு செயலாளர்கள் ககன்தீப் சிங் பேடி, கார்த்திகேயன், மதுமதி, ஆணையர்கள் லட்சுமி, சுதன் மற்றும் ரோகினி, அமர் சேவா சங்கத்தின் நிறுவன தலைவர் ராமகிருஷ்ணன், செயலாளர் சங்கர ராமன், மாற்றுத் திறனாளிகள் நல ஆலோசனை குழு உறுப் பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

* கலைஞரை ரோல்மாடலாக எடுத்துக்கொள்ளுங்கள்

கலைஞரையே நீங்கள் ஒரு ரோல்மாடலாக எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும். கலைஞர் ஒரு முறை ஒரு விபத்தை எதிர் கொண்டார். அதனால், அவரது ஒரு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டது. இருந்தாலும், அந்த வலியைக்கூட பொறுத்துக்கொண்டு, இறுதி வரை சமூகத்திற்காக உழைத்தார். ஏராளமான இலக்கிய படைப்புகள் உடன்பிறப்புகளுக்கு கடிதங்கள் தமிழ்நாட்டு வரலாற்றை திருத்தி எழுதிய அறிக்கைகள் திட்டங்களை அவரால் கொடுக்க முடிந்தது. கண்ணில் ஏற்பட்ட பாதிப்பு அவர் மனதை பாதிக்கவில்லை. கலைஞர் முதுமைக் காலத்தில், சக்கர நாற்காலியில்தான் வலம் வந்தார். சக்கர நாற்காலியில் இருந்தபடியே, எப்படி பம்பரமாக சுழன்று, சுழன்று உழைத்தார் என்று உங்களுக்கு தெரியும். இந்த 'வில் பவர்'தான் அரசியலுக்கு அவசியம். மனிதர்களுக்கு அவசியம். அதை நீங்கள் எல்லோரும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று முதல்வர் கூறினார்.

*400 மாற்றுத்திறனாளி களுக்கு ரூ.4.12 கோடியில் நலத்திட்ட உதவிகள்

சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2025ஐ முன்னிட்டு உள்ளாட்சி அமைப்புகளில் நியமிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளி களுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழா நடந்தது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்து 400 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4.12 கோடி மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப் பட்ட ஸ்கூட்டர்கள், மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலிகள், சக்கர நாற்காலியாகவும் 3 சக்கரம் வாகனமாகவும் பயன்படுத்தக்கூடிய இணைக்கும் வசதி கொண்ட மின்கலனால் இயங்கும் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கினார்.

மேலும், மாற்றுத்தி றனாளிகளுக்காக சிறந்த முறையில் சேவைபுரிந்த ஆசிரியர்கள், சமூக பணியாளர்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகிய வற்றிற்கு விருதுகளை வழங்கி சிறப்பித்ததோடு, விளையாட்டு மற்றும் ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நேரடியாக தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உறுப்பினராக வகை செய்யும் அரசினர் (திருத்தச்) சட்டமுன்வடிவுகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 16.4.2025 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்தார். இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, சுமார் 650 மாற்றுத்திறனாளிகள் நகர்ப்புற உள்ளாட்சிகளிலும், 12,913 மாற்றுத் திறனாளிகள் கிராம பஞ்சாயத்துக்களிலும், 388 மாற்றுத்திறனாளிகள் ஊராட்சி ஒன்றியங்களிலும், மாவட்ட ஊராட்சிகளில் 37 மாற்றுத் திறனாளிகளும் நியமனம் செய்யப்பட உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

# தமிழகத்தில் நான்கரை ஆண்டுகளில் 50.19 லட்சம் பேருக்கு தொழில்முனைவு பயிற்சி: அமைச்சர் அன்பரசன் தகவல்



சென்னை: டிச.5–

சென்னை தொழில்முனை வோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தொழில் முனைவோர் சான்றிதழ் படிப்பில் சேருவோர் தங்கி பயில, ரூ.2.34 கோடியில் கட்டப்பட்ட தங்கும் விடுதியைகுறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள்துறை தா.மோ.அன்பரசன் நேற்று திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: 120 பேர் தங்கும் விடுதி தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் நடத்தும் சான்றிதழ் படிப்பில் 120 பேர் தங்கி பயிலும் வகையில் தங்கும் விடுதி திறக்கப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் புத்தாக்க பற்றுச்சீட்டு திட்டத்தின்கீழ் 20 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.35.63 லட்சம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்று தொழில் முனைவோர்களாக சாதனை படைத்துள்ள 5 பெண் தொழில் முனைவோர்களுக்கு விருதுகளும் வழங்கப்படுகிறது.

திமுக அரசு பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் 50.19 லட்சம் பேருக்கு தொழில் முனைவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவித்தொகை திட்டத்தில், 572 பேருக்கு ரூ.14.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின்கீழ், 140 சிறந்த மாணவ குழுக்களுக்கு, ரூ.1 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 39 தொழில் வளர் காப்பகங்களுக்கு, ரூ.21 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த காப்பகங்கள் மூலம் 961 இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகளை தயாரித்து தொழில்முனைவோர் களாக உருவாகி உள்ளனர்.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க சான்றிதழ் படிப்பில் இதுவரை 23 பேர் சான்றிதழ் படிப்பு முடித்து புதிய தொழில்களைத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் துறை செயலர் அதுல் ஆனந்த், சிட்கோ மேலாண் இயக்குநர் கார்த்திக், தொழில் வணிக ஆணையர் நிர்மல் ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# டிச.9ல் புதுச்சேரியில் விஜய் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கோரி தவெக மனு

புதுச்சேரி: டிச.5–

ரோடு ஷோவுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், டிச.9ல் புதுச்சேரியில் விஜய் பொதுக் கூட்டத்துக்கு அனுமதி கோரி எஸ்எஸ்பியிடம் தவெகவினர் இன்று மனு அளித்துள்ளனர்.

புதுச்சேரியில் தவெக தலைவர் விஜய் ரோடு ஷோ மூலம் மக்களை சந்திக்க அனுமதி கோரி தவெகவினர் டிஜிபி அலுவலகத்தில் கடந்த வாரம் மனு அளித்தனர். ஆனால் காவல் துறை ரோடு ஷோவுக்கு அனுமதி தரவில்லை.

இதையடுத்து, டிஜிபி அலுவலகத்தில் காவல் துறை உயர் அதிகாரிகள், முதல்வர் ரங்கசாமியை அவரது வீடு மற்றும் சட்டப்பேரவை அலுவலகத்தில் ஐந்து முறை வரை பல நாட்களாக தவெக பொதுச் செயலர் புஸ்ஸி ஆனந்த் தொடர்ந்து சந்தித்தார். நடுவில் ஒருநாள் அவருடன் ஆதவ் அர்ஜுனாவும் வந்தார். ஆனால், காவல் துறை கரூர் சம்பவம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வழக்கை சுட்டிக்காட்டி அனுமதி தரவில்லை.


நகர்பகுதி வழியாக விஜய் செல்லும் ரோடு ஷோவை மாற்றி ஈசிஆரில் ஒன்றரை கி.மீ தொலைவுக்காவது ரோடு ஷோ நடத்த புஸ்ஸி ஆனந்த், முதல்வர் ரங்கசாமியிடம் அனுமதி தர கோரினார். ஆனால், காவல் துறை அதற்கு அனுமதி தரவில்லை.

ஐந்து முறை முயன்றும் ரோடு ஷோவுக்கு அனுமதி கிடைக்காமல் புஸ்ஸி ஆனந்த் திரும்பினார். இந்நிலையில், எஸ்எஸ்பி கலைவாணனிடம் தவெகவினர் பொதுக் கூட்டம் நடத்த அனுமதிக் கோரி கடிதம் அளித்தனர்.

அதில், வரும் டிசம்பர் 9ம் தேதி உப்பளம் துறைமுக மைதானத்தில் விஜய் பங்கேற்கும் தவெக பொதுக் கூட்டம் நடத்த அனுமதி தர வேண்டும் என குறிப்பிட்டிருந்தனர். இதில் காலை 7 முதல் மாலை 6க்குள் நேரம் ஒதுக்கி தரவும் கோரியுள்ளனர்.

# புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களை பாதுகாக்க நடவடிக்கை

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனை



சென்னை: டிச.5–

டிட்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களை பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில் நேற்று தலைமை செயலகத்தில் ஆய்வு கூட்டம் நடந்தது. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு 16.10.2025 அன்று துவங்கி அனைத்து மாவட்டங் களிலும் பெய்து வருவதுடன், அக்டோபர் மாதம் நிலவிய மோன்தா புயல் மற்றும் தற்போதைய டிட்வா புயல் காரணமாக கனமழை மற்றும் அதி கனமழையாக இதுவரை 10 சதவீதம் கூடுதலாக மொத்தம் 401.8 மி.மீ மழை பதிவாகியுள்ளது. தற்போதைய நிலவரப்படி 68,226 எக்டர் பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக் கலை பயிர்கள் நீரில் மூழ்கி யுள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள நெல்வயல்களில் தேங்கியுள்ள வெள்ள நீரை உடனடியாக வடிக்க அனைத்து நடவடிக்கை களையும் எடுக்க வேண்டும் என்று வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிவுறுத்தினார். அப்போது, வருவாய் துறையுடன் இணைந்து வயல் ஆய்வு மூலம் 33 சதவீதத்திற்கு மேல் ஏற்பட்டுள்ள பயிர் பாதிப்பை கணக்கீடு செய்து டிசம்பர் மாத இறுதிக்குள் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், நீரில் மூழ்கி யுள்ள பயிர்களை பாதுகாத்திட எடுக்கப்பட வேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பயிர் வாரியான தெளிவான அறிவுரை களை நேரடியாக விவசாயி களுக்கு வழங்க வேண்டும், பூச்சி, நோய் தாக்குதலை தொடர்ந்து கண்காணித்து, பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

மேலும், இதுபோன்ற இயற்கை இடற்பாடுகள் நிகழும் நேரங்களில் விவசாயிகளுக்கு துறை அலுவலர்கள் உறுதுணை யாக இருந்து அவர்களுக்கு உதவிடவும் கேட்டுக் கொண்டார். விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங் களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், அனைத்து தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் போதுமான அளவு யூரியா இருப்பு வைக்கப்பட வேண்டும் என்றும், மறு பயிர் செய்வதற்கு தேவை யான விதைகள், பூச்சி, நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பயிர்களை காப்பாற்றிட பயிர் பாதுகாப்பு மருந்துகளை இருப்பு வைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட அலுலவர்களுக்கு அறிவுறுத்தினார்.

வடகிழக்கு பருவமழை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவ்வப்போது ஏற்படும் பயிர் பாதிப்பு நிலவரங்களை வட்டார வேளாண் அலுவர்களுக்கு தெரிவித்து உரிய ஆலோசனை களை பெற்று பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத்துறை இயக்குநர் முருகேஷ், தோட்டக்கலை துறை இயக்குநர் குமாரவேல் பாண்டியன் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு 24 மாற்றுத்திறன் நபர்களுக்கு ரூ.97,149 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, வழங்கினார்.







அரியலூர், டிச. 5–

அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில், மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு ஒற்றுமையை வளர்ப்போம் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, வாசிக்க அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் கொண்டாடப்படுகிறது. அதன்படி இன்றையதினம் மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஒற்றுமையை வளர்ப்போம் உறுதிமொழியான "சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் நலனுக்காகவும் எப்போதும் உடன் நிற்போம் என்றும், அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தளத்தில் அவர்களுக்கு இருக்கக்கூடிய சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை உருவாக்க எங்களாலான அனைத்து முயற்சிகளையும் செய்வோம் என்றும் உறுதி கூறுகிறோம்.

முழுமையாகவும், சமத்துவத்துடனும் வெற்றிகரமாகவும் மாற்றுத்திறனாளி குழந்தைகள் இங்கு எந்தப் பாகுபாடும் இன்றி, அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ்வதற்குரிய பாதுகாப்பை அவர்களுக்கு அளிப்பது இன்றியமையாதது என நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அவர்களை எங்கள் குடும்பத்தில் ஒருவராக கருதி நட்புணர்வை வளர்ப்போம் என்றும் உறுதிமொழி ஏற்கிறோம்" என மாவட்ட ஆட்சித் தலைவர் வாசிக்க, அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அதனைத்தொடர்ந்து, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு 01 மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ.15,750 மதிப்பில் சக்கர நாற் காலி, 21 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு ரூ.68,985 மதிப்பில் காதொலி கருவிகள், 01 மாற்றுத்திறன் பயனாளிக்கு ரூ.11,445 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள், 01 பயனாளிக்கு ரூ.969 மதிப்பில் ஆக்ஸிலரி ஊன்றுகோல் என மொத்தம் 24 பயனாளிகளுக்கு ரூ.97,149 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் பாலாஜி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# புழல் மற்றும் மீஞ்சூர் பகுதிகளில் மழை நீர் வெளியேற்றும் பணிகள் தொடர்பாக அமைச்சர் சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டு, நரிக்குறவர் சமூக மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார்



திருவள்ளூர் டிச 05

திருவள்ளூர் மாவட்டம், புழல் ஊராட்சி ஒன்றியம், தீர்த்தகரியம் பட்டு குமரன் நகர் பகுதியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தேங்கியுள்ள மழை நீர் வெளியேற்றும் பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மழை நீரை வெளியேற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், அரியன் வாயில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைச்சர் சா.மு.நாசர் தற்காலிக நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 17 குடும்பங்களை சேர்ந்த 58 நரிக்குறவர் சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு உணவு, உடை உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரண பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார். கூடுதலாக முகாம்களுக்கு வெளியே உள்ள 250 நரிக்குறவர் சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு உணவு பொட்டலங்களும், 3 வேளைகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், அரியன்வாயில் ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நரிக்குறவர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீர் வெளியேற்றும் பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு நீரை வெளியேற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும் மாற்று இடம் வழங்குவதற்கு ஆய்வு மேற்கொள்வது தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அத்திப்பட்டு பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை இரட்சத இயந்திரங்களின் மூலம் வெளியேற்றப்படும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் ராஜவேல், மீஞ்சூர் பேரூராட்சி செயல் அலுவலர் டி.மகேஸ்வரி, வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி, பொன்னேரி வட்டாட்சியர் சோமசுந்தரம், வருவாய் துறை, ஊரகவளர்ச்சி துறை, பேரூராட்சி துறை, நெடுஞ்சாலைகள் துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் ஸ்ரீ காமாட்சி மருத்துவமனை இதயவியல் துறை மருத்துவர்கள் சாதனை...




தஞ்சை,டிச5

தஞ்சையில் இயங்கி வரும் ஸ்ரீ காமாட்சி மருத்துவமனை மேலும் ஒரு புதிய சாதனையை செய்துள்ளது.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் பகுதியைச் சேர்ந்த 75 வயது பெண்மணிக்கு திடீர் மார்பு வலி மற்றும் மூச்சு திணறல் ஏற்பட்டதன் காரணமாக தஞ்சை ஸ்ரீ காமாட்சி மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவிற்கு உறவினர் மூலம் அழைத்து வரப்பட்டார்.

அங்கு அவரை பரிசோதித்த இருதய மருத்துவ சிறப்பு நிபுணர் டாக்டர் இளங்குமரன் அப்பெண்ணிற்கு இதய துடிப்பு மிக குறைவாக இருப்பதாகவும் அவசர நிலையில் ஆஞ்சியோ கிராம் செய்ய வேண்டும் என பரிந்துரை செய்தார்.

மேலும் உறவினர்களின் ஒப்புதலின்படி அப்பெண் மணிக்கு ஆஞ்சியோகிராம் செய்யப்பட்டதில் அவருக்கு இதயத்துக்கு ரத்தம் வழங்கும் ரத்த நாளங்கள் செயலிழந்து உள்ளதை அறிந்தனர்.

துரிதமாக தற்காலிக இருதய பேஸ்மேக்கர் கருவியை பொருத்தி உயிரை காப்பாற்றினார்.

மேலும் இதயத்தின் செயல்பாட்டை சரி செய்ய ஸ்ரீ காமாட்சி மருத்துவமனையின் இருதய மருத்துவ சிறப்பு நிபுணர் டாக்டர். இளங்குமரன் அவர்களின் தலைமையிலான மருத்துவ குழுவைக் கொண்டு, உலகத்தரம் வாய்ந்த கேத்லாப் அரங்கில் உயர்தர உபகரணங்களை பயன்படுத்தி இருதய நுண் துளை இரத்த குழாய் மூலம் மிகச்சிறிய நிரந்தர பேஸ் மேக்கர் கருவியான மிக துல்யமாகவும் குறுகிய நேரத்திலும் இரத்தக் குழாய் வழியாக இருதயத்திற்கு வெற்றிகரமாக பொருத்தப் பட்டது. பேஸ்மேக்கர் என்பது மிகவும் சிறிய வடிவம் கொண்டது. மற்றும் இதில் பேட்டரி கிடையாது. அதிநவீன தொழில்நுட்பம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சிகிச்சைக்குப் பின்னர் பெண்மணிக்கு சுவாச நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு, இருதயத் துடிப்பு சீராக இருந்தது. மேலும் அவருக்கு உரிய மருத்துவம் அளித்து நலமோடு வீடு திரும்பினார்.

தனக்கு மறுபிறவி தந்த ஸ்ரீ காமாட்சி மருத்துவமனையின் இருதய மருத்துவ சிறப்பு நிபுணர் டாக்டர் இளங்குமரன் மற்றும் மருத்துவ குழுவினருக்கு தனது மனமார்ந்த நன்றியினை அப்பெண்மணி தெரிவித்தார்.

டெல்டா மாவட்டங்களில் முதன்முறையாக அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட பேஸ் மேக்கர் போன்ற கருவி பயன்படுத்தி இருதய சிகிச்சை அளிப்பதில் ஸ்ரீ காமாட்சி மருத்துவமனை முன்னோடியாக உள்ளது என்பது பெருமைக் குரியது.

இந்த நிகழ்வின் போது மருத்துவமனை மூத்த ஆலோசகர் டாக்டர். மோகன், துணை மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். தீபக்நாராயணன், மற்றும் இருதய மருத்துவம் மற்றும் எலக்ட்ரோ பிசியோலேஜிஸ்ட் மருத்துவர் அன்பரசன் ஆகியோர் உடனிருந்தனர்.

# விழுப்புரத்தில், போதைப்பொருள் மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்.




விழுப்புரம், டிச. 5–

விழுப்புரம் நகரத்தில் இயங்கிவரும் அன்னை தெரேசா பேரா மெடிக்கல் செவிலியர் கல்லூரியில், இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி தமிழ்நாடு கிளையின் அறிவுறுத்தலின் படி, போதைப்பொருள் மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நிர்வாக இயக்குனர் திரு. திருமால் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவின் தன்னார் வளரும். மாவட்ட ரெட் கிராஸ் சொசைட்டி நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் விழுப்புரம் கல்வி மாவட்டக் கன்வீனர். முனைவர். ம.பாபு செல்வதுரை அவர்கள் கலந்துக் கொண்டு போதை பழக்கத்திற்கு அடிமையாகாமல் தனி ஒழுக்கத்துடன் வாழ்வேன் என்ற உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை தொடர்ந்து மற்றவர்களுக்கு போதை பழக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், இது சார்ந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை பள்ளி, கல்லூரிகள் மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் கொண்டு சேர்க்கும் பணியில் கல்லூரி மாணவர்களின் தன்னார்வமாக செயல்பட வேண்டும். அத்துடன் தற்கொலையினை தடுத்திடும் வண்ணம் தன்னம்பிக்கை, மன உறுதி, சவால்களை எதிர் கொள்ளும் ஆற்றலை வளர்த்து கொள்வதோடு, கஷ்டத்திலும், மன உலைச்சலிலும் இருப்போருக்கு ஆறுதல் படுத்தும் ஆலோசகராகவும், கல்லூரி மாணவர்கள் செயல்பட வேண்டும் என கருத்துரையாற்றினார்.

இறுதியில் போதைப் பொருள் மற்றும் தற்கொலை தடுப்பினை வலிவுறுத்தி சுமார் 100 செவிலியர் பயிற்சி மாணவிகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# சேலத்தில் எஸ்ஐஆர் கணக்கீட்டுப் படிவம் 85 சதவீதம் திரும்ப ஒப்படைப்பு.

## மாவட்ட தேர்தல் அலுவலரும்,ஆட்சியருமான ரா.பிருந்தாதேவி தகவல்.

சேலம். டிச.5–

சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டுப் படிவம் 85 சதவீதம் மட்டுமே திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான ரா.பிருந்தாதேவி கூறினார்.



இது குறித்து மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் படிவம் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு, அந்தப் படிவத்தை பூர்த்திசெய்வதற்கு உதவும்விதமாக மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சி அலுவலங்களில் சிறப்பு வாக்காளர் உதவிமையங்கள் செயல்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தைப் பொருத்தவரையில், கணக்கீட்டுப் படிவம் 85 சதவீதம் மட்டுமே திரும்பப் பெறப்பட்டுள்ளது. வாக்காளர் இறப்பு, நிரந்தர முகவரி மாற்றம், நிரந்தர குடிப்பெயர்வு இனங்கள் தவிர்த்து, இதர வாக்காளர்கள் கணக்கீட்டுப் படிவத்தை உடனடியாகப் பூர்த்திசெய்து தங்கள் பகுதிக்கான வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் ஒப்படைத்து, உங்களது பெயர் வரைவு வாக்காளர் பட்டியல் 2026இல் இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்திசெய்து மீள ஒப்படைக்காத வாக்காளர்களது பெயர் வரும் 16 ஆம் தேதி வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாது. எனவே, சரியான வாக்காளர் பட்டியலை தயார்செய்ய ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

# 2026ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

## மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தகவல்.

திண்டுக்கல், டிச.5–

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்த சேவை புரிந்தவருக்கு 2026ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட உள்ளது. இவ்விருது பெறுபவருக்கு ரூ1.50 இலட்சத்திற்கான காசோலை, பொன்னாடை மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மேற்படி விருதிற்கு கீழ்கண்ட தகுதியான நபர்களிடம் இருந்து கருத்துருக்கள் வரவேற்கப்படுகின்றன. தமிழக அரசின் விருதுகள் இணைய தளத்தில் (http://awards.tn.gov.in) விண்ணப்பித்து கருத்துருவினை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தில் 31.12.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2026ஆம் ஆண்டு ஔவையார் விருதுவழங்கும்பொருட்டு கருத்துருக்கள் அனுப்புவதற்கான வழிமுறைகள் தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

- குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கைகள், சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்து விளங்கும் மகளிராக இருத்தல் வேண்டும்.
- பெண்களுக்கான இச்சேவையை தவிர்த்து வேறு சமூக சேவைகள் இவ்விருதுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- இணையதளத்தில் பதிவு செய்த பிறகு அனைத்து ஆவணங்களையும் சம்பந்தப்பட்ட சமூகநல அலுவலகத்திற்கு, கையேடாக தயார் செய்து தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சு செய்யப்பட்டு தலா 2 நகல்கள் அனுப்பிட வேண்டும்.

எனவே, 2026ஆம் ஆண்டுக்கான ஔவையார் விருது பெறுவதற்கு தகுதியான நபர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன்., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதிற்கு விண்ணப்பிக்கலாம்: திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் டிச 05 :

சமூக நீதிக்காக பாடுபடுபவர்களை சிறப்பு செய்வதற்காக "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" 1995 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது பெறுவோர்க்கு ரூ.5 லட்சம் விருது தொகையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் தகுதியுரையும் வழங்கப் படுகிறது. இவ்விருதாளர் முதலமைச்சரால் தேர்வு செய்யப்படுகிறார்.

2025 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" வழங்குவதற்கு உரிய விருதாளரை தேர்ந்தெடுக்க பரிந்துரைகள் வரவேற்கப்படுகிறது. எனவே, சமூகநீதிக்காக பாடுபட்டு பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட மேற்கொள்ளப் பட்ட பணிகள் மற்றும் அதன் பொருட்டு எய்திய சாதனைகள் ஆகிய தகுதிகள் உடையவர்கள் தங்களது விண்ணப் பத்தினை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம். தங்களது விண்ணப்பம், சுயவிவரம், முழு முகவரி, தொலைபேசி எண் மற்றும் சமூக நீதிக்காக பாடுபட்ட பணிகள் குறித்த விவரம் மற்றும் ஆவணங்கள் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

2025 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதிற்கான விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 18.12.2025 என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் பெய்த தொடர் மழையால் டெங்கு பாதிப்பு அதிகரிப்பு: பொது சுகாதாரத்துறை தகவல்

சென்னை: தமிழ்நாட்டில் பெய்த தொடர் மழையால் டெங்கு பாதிப்பு அதிகரித்துள்ளதாக பொது சுகாதாரத்துறை தகவல் தெரிவித்துள்ளது. சென்னை, கோவை, தஞ்சை, கடலூர், மதுரை, வேலூரில் டெங்கு பாதிப்பு அதிகரிப்பு. தமிழ்நாடு முழுவதும் டெங்கு காய்ச்சலால் நாள்தோறும் 100 முதல் 120 பேர் வரை பாதிக்கப்படுவதாக தகவல் வெளியாகியது. டெங்கு பாதிப்பு அதிகரிக்கும் மாவட்டங்களில் கூடுதல் மருத்துவ முகாம்களை நடத்த பொது சுகாதாரத்துறை ஆணையிட்டது. 3 நாட்களுக்கு மேல் அதீத காய்ச்சல் இருந்தால் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றும் அறிவுறுத்தியது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றினை நட்டு வைத்தார். உடன் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# புதுச்சேரியில் உதயமாகிறது புதிய குருகுலம்: முதலமைச்சரைச் சந்தித்து ஆசி பெற்றார் கராத்தே கதிரவன்!



புதுச்சேரி: டிச.5–

புதுச்சேரி மாநிலத்தில் மாணவர்களின் ஒழுக்கம், கலை மற்றும் கலாச் சாரத்தை மேம்படுத்தும் நோக்கில், புதிய ‘குருகுலம்‘ ஒன்று விரைவில் தொடங்கப்பட உள்ளது. திருப்பத்தூர் பாரத் குரூப் ஆஃப் இன்ஸ்டியூஷன் (Bharat Group of Institutions) சார்பில் அமையவுள்ள இந்த குருகுலத்திற்கான முன்னெடுப்புகள் தீவிர மடைந்துள்ளன.

இதன் முக்கிய நிகழ்வாக, திருப்பத்தூர் பாரத் குரூப் ஆஃப் இன்ஸ்டியூஷன் மற்றும் குருகுலத்தின் தலைமை ஆசான் கராத்தே கதிரவன் அவர்கள், புதுச்சேரி சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், புதுச்சேரி முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, புதுச்சேரியில் தொடங்கப்படவுள்ள குருகுலத்தின் நோக்கங்கள், அங்கு பயிற்றுவிக்கப் படவுள்ள கல்வி, கலைகள் மற்றும் வழிமுறைகள் குறித்து முதலமைச்சரிடம் விரிவாக எடுத்துரைக்கப் பட்டது. இம்முயற்சியைத் தொடங்குவதற்கு முதலமைச்சரின் ஆசீர் வாதத்தையும், குருகுலத்தை வெற்றிகரமாக வழிநடத்துவதற்கான முக்கிய அறிவுறுத்தல்களையும் தலைமை ஆசான் கராத்தே கதிரவன் பெற்றுக் கொண்டார்.

கலை, இலக்கியம் மற்றும் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பல முக்கிய ஆளுமைகள் தலைமை ஆசான் கராத்தே கதிரவன் அவர்களுடன் அக்னி ஆதவன் (திரைப்பட இயக்குனர்) மணி சாமி (நீதிக்கதிர் பத்திரிகை நிருபர்)

ஜிம் ஜி.வி மோகன் (சிலம்பம் மாஸ்டர்) புருஷோத்தமன் (சிலம்பம் மாஸ்டர்) ஜான் போஸ்கோ (மியூசிக் மாஸ்டர்) காயத்ரி (கராத்தே மாஸ்டர்) மகாலட்சுமி (கராத்தே மாஸ்டர்) ஆகியோர் உடன் இருந்தனர், மேலும்

புதுச்சேரி மண்ணில் அமையவுள்ள இந்த குருகுலம், வருங்கால சந்ததியினருக்குத் தற்காப்பு கலைகள் மற்றும் வாழ்வியல் நெறிகளைக் கற்றுத்தரும் ஒரு கலங்கரை விளக்கமாக அமையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...**



ஈரோடு ரயில்வே நுழைப்பாலத்தில் மழை நீர் வடிகால் சேதமடைந்தது. அதனால் வாகனங்கள் செல்ல சிரமம் ஏற்பட்டதால் பொதுமக்களின் சிரமத்தை போக்கும் நோக்கில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் அந்த இடத்தை ஆய்வு செய்தார். உடன்.ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சி. சந்திரகுமார் அவர்கள்,ஈரோடு மாவட்ட கழக துணை செயலாளர் ஆ. செந்தில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த புகைப்பட கண்காட்சி திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருமழாபாடி ஊராட்சியில் இன்று 04/12/25 பொதுமக்கள் பார்வையிட வைக்கப்பட்டிருந்தன, இப்புகைப்பட கண்காட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரால் கடந்த நாண்கு ஆண்டுகளாக துவக்கி வைக்கப்பட்ட நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படங்கள் மாண்புமிகு அமைச்சர்கள் ,மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் ,ஆகியோர் கலந்து கொண்டு செயல்படுத்திய நலத்திட்டங்கலான, நான் முதல்வன்,இல்லம் தேடி கல்வி, புதுமைப்பெண் திட்டம்,தமிழ்புதல்வன் ,கலைஞர் கனவு இல்லம்,விடியல் பயணம், நான் முதல்வன் உங்களைத்தேடி உங்கள் ஊரில், கள ஆய்வில் முதல்வர்,வேலை வாய்ப்பு முகாம்கள்,கலைஞர் கைவினைஞர் திட்டம்,இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 முதலமைச்சரின் வீடு தேடி ரேசன் பொருட்கள் வழங்கும் தாயுமாணவர் திட்டம்,நலன் காக்கும் ஸ்டாலின் திட்டம், உங்களுடன் ஸ்டாலின் முகாம்,குறித்த புகைப்படங்கள் ,உதவும் கரங்கள் திட்டம்,தொடர்பான புகைப்படங்னள் இடம்பெற்றிருந்தன, இப்புகைப்பட கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டு தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டனர்.

# அமைச்சர்கள் சி.சிவசங்கர்,அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் பள்ளி மாணவ, மாணவிகள் மட்டும் பயணிக்கும் வகையில் புதிய பேருந்து வழித்தட சேவையை தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளுடன் பேருந்தில் பயணம் செய்தனர்.




திருச்சி. டிச. 5–

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட்., திருச்சி மண்டலம் மூலம் திருவெறும்பூர் தொகுதிக்குட் பட்ட பகுதிகளில் பள்ளி மாணாக்கர்கள் அதிகம் பயணிக்கும் காலை மற்றும் மாலை பள்ளி நேரங்களில் மாணாக்கர்கள் மட்டும் எளிதாக பயணம் செய்யும் வகையில் கட்டணமில்லா நகரப்பேருந்து கள் இயக்கம் செய்யப்படுகிறது.

அதன் விபரம்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியிலிருந்து மாணவ, மாணவிகள் எவ்வித சிரமமும் இன்றி பள்ளிக்குச் செல்லும் வகையில் காலை 8 மணிக்கு பேருந்து அண்ணாநகரிலிருந்து புறப்பட்டு முக்குலத்தோர் மேல்நிலைப்பள்ளிக்கும், மாலை 4.30 மணிக்கு முக்குலத்தோர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து அண்ணாநகருக்கும் இயக்கப்படுகிறது. காலை 8 மணிக்கு பேருந்து திருவெறும்பூர் பேருந்து நிலையத்திலிருந்து ஈ.பி. ரோடு வைகவுண்ட்ஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கும் மாலை 4.30 மணிக்கு ஈ.பி. ரோடு வைகவுண்ட்ஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளியிலிருந்து திருவெறும்பூர் பேருந்து நிலையத்திற்கும் இயக்கப் படுகிறது.

இதே போல் காட்டூர் பாப்பாக்குறிச்சி பேருந்து நிறுத்தத்திலிருந்து காலை 8 மணிக்கு பேருந்து மரக்கடை சையது முர்துஸா மேல்நிலைப்பள்ளிக்கும், மாலை 4.30 மணிக்கு மரக்கடை சையது முர்துஸா மேல்நிலைப்பள்ளி யிலிருந்து காட்டூர் பாப்பாக் குறிச்சி பேருந்து நிறுத்தத்திற்கும் மேலும், அரியமங்கலம் பால்பண்ணை நால்ரோடு பேருந்து நிறுத்தத்திலிருந்து காலை 8 மணிக்கு பேருந்து தெப்பக்குளம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கும் மாலை 4.30 மணிக்கு தெப்பக்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியி லிருந்து அரியமங்கலம் பால்பண்ணை நால்ரோடு பேருந்து நிறுத்தத்திற்கும் பிரத்யேகமாக மாணவ, மாணவிகள் பயணம் செய்யும் வகையில் இப்பேருந்துகளின் இயக்கத்தை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் (04.12.2025) தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளுடன் பேருந்தில் பயணம் செய்து அவர்களிடம் கலந்துரையாடி இனிப்புகள் வழங்கினார்கள்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணண்,இ.ஆ.ப., அவர்கள், மண்டலத்தலைவர் திரு.மதிவாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.என். சரவணன், தமி;ழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கும்ப) லிட்,.பொது மேலாளர் (புதுக்கோட்டை மண்டலம்) திரு.கே.முகமது நாசர் அவர்கள், துணை மேலாளர் தொழில் நுட்பம் .புகழேந்திராஜ், மாமன்ற உறுப்பினர்கள் நீலமேகம், சிவக்குமார், தொழிற்;சங்க நிர்வாகிகள், போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், பொதுமக்கள், மாணவ, மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அரியலூர் ஆளுநர் ஆர்.என். ரவியை கண்டித்து திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது






அரியலூர் அண்ணா சிலை அருகில் தொடர்ந்து தமிழ்நாட்டையும் தமிழர்களையும் பயங்கரவாதிகள்போல் சித்தரிக்கும் ஆளுநர் ஆர். என். யவியை கண்டித்து திமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட்டிற்கு எதிராகவும் தமிழர்களுக்கு எதிராகவும் தொடர்ந்து பேசி வரும் ஆளுநர் தனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். பாஜக அரசின் கைப்பாவையாக செயல்படும் ஆளுநர் தமிழர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் பண்பாடு தமிழர்களின் கலாச்சாரத்திற்கு ஆளுநர் ரவி மதிப்பளிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தமிழ்நாட்டிற்கு எதிராகவும் தமிழர்களுக்கு எதிராகவும் ஆளுநர் பேசி வரும் போக்கை கண்டித்து கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் திமுக காங்கிரஸ் விடுதலை சிறுத்தைகள் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## தமிழகம் முழுவதும் டாஸ்மாக் பணியாளர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

சென்னை: டிச.5–

டாஸ்மாக் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு வெளியிட்டுள்ள அறிக்கை: நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு உள்ளிட்ட மலைபிரதேசங்களில் நெகிழி பொருட்கள் விற்பனை செய்யவோ, பயன்படுத்தவோ உயர் நீதிமன்றம் தடை விதித்தது. இதில், மதுபான சில்லரை விற்பனை கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபாட்டில்களின் விலையோடு கூடுதலாக 10 ரூபாய் பெற்று கொள்ளவும், பருகிய பிறகான காலி மதுபாட்டில்களை டாஸ்மாக் கடைகளில் கொடுத்து கூடுதலாக கொடுத்த ரூ,10ஐ திரும்ப பெறும் வகையிலான ஒரு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த நீதிமன்றம் தரப்பில் உத்தரவிட்டது. இவை வரவேற்கத்தக்க ஒன்றாகும். இருந்தாலும், இத்திட்டதை அமலாக்குவதற்கான முறையான செயல்முறையினை டாஸ்மாக் நிர்வாகம் உருவாக்காமல் கடை ஊழியர்களிடம் திணித்துள்ளது.

ஏற்கனவே ஊழியர் பற்றாக்குறை இத்திட்டம் மேலும் கூடுதல் வேலைப்பளுவை ஏற்படுத்தும். இந்த காலி மதுபாட்டிகளை திரும்ப பெறும் திட்ட அமலாக்கம் என்பது சட்டத்திற்கும், இயற்கைக்கும் எதிரானது. இது தொடர்பான வழக்கில் நீதிமன்றம் இறுதி உத்தரவை பிறப்பிக்கும் வரை காலி மது பாட்டில்களை திரும்ப பெறும் திட்டத்தை நிறுத்தி வைக்க கோரியும், இதற்கான மாற்றும் திட்டத்தை உருவாக்கவும் வலியுறுத்தி டாஸ்மாக் தொழிற்சங்ககளின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தொடங்கி வைத்தார். உடன் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமமனை முதல்வர் மரு.தேவிமீனாள், இணை இயக்குனர் மரு.நந்தினி, மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலுவலர் / துணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்) மரு. சௌண்டம்மாள், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு கட்டுப்பாடு திட்ட மேலாளர் தாமோதரன் ஆகியோர் உள்ளனர்.

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை டித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களை பாதுகாத்திட எடுக்கப்பட வேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்:

திருச்சி, நவ.5–

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 50089 ஹெக்டர்நெற்பயிர் பயிரிடப் பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை காலத்தில் தற்போது டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையின் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட பின்வரும் பயிர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

எனவே, விவசாயிகள்; சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைச் சுற்றி தேங்கியுள்ள அதிகப்படியான நீரினை வடிகால் அமைத்து உடனடியாக வடித்து விடவேண்டும். மழைக் காலங்களில் உரம் இடுதல், பூச்சி மருந்து தெளித்தல், களைக்கொல்லி இடுதல் போன்றவற்றைத் தவிர்த்திட வேண்டும். பூச்சிநோய் தாக்குதலைத் தொடர்ந்து கண்காணித்து பொருளாதார சேதநிலைக்கு மேல் இருந்தால் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். நெற்பயிரில் தழைச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடு (மஞ்சள் நோய்) காணப்பட்டால் 2 கிலோ யு+ரியாவுடன் 1 கிலோ ஜிங்க் சல்பேட் கலந்து 200 லிட்டர் நீருடன் கைத் தெளிப்பான் கொண்டு இலைவழி யூட்டமாக தெளிக்க வேண்டும். மழை வெள;ளத்தில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மேல் உரமாக தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்து 25 சதவீதம் கூடுதலாக அளிக்க வேண்டும். எனவே, மேற்கூறியுள்ள வழி முறைகளை பின்பற்றி கனமழையினால் பாதிக்கப்பட்ட வயல்களில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் .வே.சரவணன் தெரிவித்துள்ளார்.

## திருச்சி அமிர்த வித்யாலயம் பள்ளியில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள்



திருச்சி இரட்டை வாய்க்கால் அமிர்த வித்யாலயம் சிபிஎஸ்சி பள்ளியில் மாவட்ட அளவிலான யோகா மற்றும் கேரம் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் திருச்சி மாவட்டத்தில் உள்ள 30க்கும் மேற்பட்ட பள்ளிகள் கலந்து கொண்டன. யோகா மற்றும் கேரம் இரு விளையாட்டுகளிலும் சுமார் 500க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற 150க்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு பரிசுகளை பள்ளியின் முதல்வர் வழங்கினார்.

# மருத்துவ பயனாளர்களுக்கு காப்பீடு திட்டத்தில் சிகிச்சை அளிக்க மறுத்தால் மருத்துவமனை மீது நடவடிக்கை: மா.சுப்பிரமணியன் எச்சரிக்கை



சென்னை: டிச.5–

மருத்துவ பயனாளர்களுக்கு காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்க மறுத்தால் மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மா.சுப்பிரமணியன் எச்சரித்துள்ளார். சென்னை ராஜீவ் காந்தி பொது மருத்துவமனையில் அதிநவீன 1.5 டெஸ்லா எம்ஆர்ஐ கருவி, முழுமையாக தானியங்கும் புற ரத்தக்குழாய் நோயறிதல் கருவியை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்தார். மேலும் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, அரசு புனர்வாழ்வு மருத்துவ நிலையம் சார்பாக ரூ.4.56 லட்சம் செலவில் அதிநவீன செயற்கை கால்கள், சக்கர நாற்காலிகள் ஆகிய உபகரணங்களை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கி, “அமைச்சருடன் நிமிர்ந்து நட” முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் வளைவான முதுகெலும்பு குறைபாடுகளை அறுவை சிகிச்சை மூலம் சீர் செய்யப்பட்டுள்ள 100க்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளிகள் மூலம் சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, அவர் நிருபர்களிடம் கூறுகையில், “மருத்துவ பயனாளர்கள் காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்க மறுப்பதாக புகார் கிடைத்தால் சம்பந்தப்பட்ட மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் புகார் தெரிவிக்க 104 என்ற எண்ணை மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்” என்றார். நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் செந்தில்குமார், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் வினீத், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் சுகந்தி ராஜகுமாரி மற்றும் உயர் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

## சேலத்தில் பரபரப்பு சம்பவம்.

# பெண்ணின் கன்னத்தில் அறைந்த அதிமுக முன்னாள் எம்எல்ஏ.



சேலம். டிச. 5–

சேலத்தில் அதிமுகவின் முன்னாள் எம்பியும், அதிமுகவின் முன்னாள் எம்எல்ஏவுமான அர்ஜூனன் சாலையில் சண்டையிட்டு பெண்ணின் கன்னத்தில் அறைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதுதொடர்பான வீடியோ தற்போது இணையதளங்களில் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

சேலம் மாவட்டத்தை சேர்ந்தவர் அர்ஜூனன். இவர் திமுகவில் எம்பியாக இருந்தார். 1980ம் ஆண்டில் தர்மபுரி லோக்சபா தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அதன்பிறகு திமுகவில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்தார். மறைந்த முதல்வர் ஜெயலலிதா அணி சார்பில் 1989 ம் ஆண்டில் சேலம் மாவட்டம் தாரமங்கலம் சட்டசபை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பிறகு 1991ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் அதிமுக சார்பில் வீரபாண்டி சட்டசபை தொகுதியில் போட்டியிட்டு எம்எல்ஏவானார்.

இவர் அடிக்கடி சர்ச்சையில் சிக்கி வருகிறார். டோல்கேட்டில் அவருக்கும், போலீசாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. இதையடுத்து அவர் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டார். இந்நிலையில் தான் சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே காமனேரி மற்றும் சின்னதிருப்பதி இடையே சாலை மேம்படுத்தும் பணி நடந்து வருகிறது. பல இடங்களில் சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த பகுதியில் அர்ஜூனனுக்கு சொந்தமான இடம் உள்ளது. அங்கு சாலை விரிவாக்கம் செய்ய அவர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அதேவேளையில் அந்த பகுதியில் வசிக்கும் மக்களின் நிலத்துக்கு அருகே சாலை விரிவாக்கம் செய்யும்படி கூறியுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மக்களுக்கும், அர்ஜூனனுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த வாக்குவாதம் முற்றவே ஆத்திரமடைந்த அர்ஜூனன் தனது வேஷ்டியை மடித்து கட்டி ஆக்ரோஷமாக சென்று ஒரு பெண்ணின் கன்னத்தில் அறைந்தார். அந்த பெண்ணுக்கு மிரட்டல் விடுக்கும் தொனியில் பேசினார். இதையடுத்து அங்கிருந்தவர்கள் பெண்ணை எப்படி அடிக்கலாம்? என்று அவரிடம் வாக்குவாதம் செய்கின்றனர். இந்த வீடியோ தற்போது இணையதளங்களில் வெளியாகி வேகமாக பரவி வருகிறது. முன்னாள் எம்பி, எம்எல்ஏவான அர்ஜூனனுக்கு நெட்டிசன்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

# மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 06 அன்று திண்டல் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற உள்ளதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு



ஈரோடு, டிச.5–

ஈரோடு மாவட்டம், திண்டல் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 06.12.2025 சனிக்கிழமை அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு (04.12.2025) முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின்கீழ் 18 வயது முதல் 45 வயது வரையுள்ள ஆண், பெண், இருபாலர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 06.12.2025 சனிக்கிழமை அன்று காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை திண்டல் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 285 க்கு மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனத்திற்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்யவுள்ளனர். எனவே, மேற்படி முகாமில் 8 ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை/ ஐ.டி.ஐ /டிப்ளமோ/ நர்சிங் / பார்மஸி / பொறியியல் ஆகிய பிரிவுகளில் பயின்று, கல்வி தகுதி பெற்ற இளைஞர்கள், இளம்பெண்கள் கலந்து கொள்ளலாம்.

மேற்கண்ட முகாமிற்கு வரும்பொழுது வேலைநாடுநர்கள் தங்களுடைய கல்வி சான்றிதழ், குடும்ப அட்டை ஆதார் அட்டை நகலுடன் கலந்து கொண்டு தங்களுக்கேற்ற வேலைவாய்ப்பினை தேர்வு செய்து பயன்பெறலாம்.

இம்முகாமில் அமைக்கப்பட்ட அரங்குகள் மற்றும் கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, ஆகிய வசதிகள் முறையாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது உதவி இயக்குநர் (மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம்) திருமதி.ராதிகா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் போக்கு தொடருமானால்,,, மத்திய அரசுக்கு செல்வப்பெருந்தகை எச்சரிக்கை ,



சென்னை. டிச. 5–

“தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: இந்தியாவிலேயே பா.ஜ.க. காலூன்ற முடியாத மாநிலமாக தமிழ்நாடு இருப்பதால் மத்திய அரசு வஞ்சிக்கிற போக்கை தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. நேற்று நாடாளுமன்றத்தில் சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டிய ரூபாய் 2,152 கோடி எப்போது ஒதுக்கப்படும் என்று எழுப்பப்பட்ட கோரிக்கைக்கு மத்திய கல்வித்துறை மந்திரி தர்மேந்திர பிரதான் அளித்துள்ள பதில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது. எதிர்கட்சிகள் ஆளுகிற தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இந்த நிதி ஒதுக்கப்படாமல் மறுக்கப்பட்டு வருகிறது. பா.ஜ.க. அரசு 2020ல் அறிமுகம் செய்த புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டு பி.எம்.ஶ்ரீ பள்ளிகள் மற்றும் ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளிகள் ஆகியவற்றை திறக்க புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டால் மட்டுமே சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படும் என்று கூறியிருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது. மும்மொழி திட்டத்தின்படி இந்தி திணிக்கப்படுவதால் அதை ஏற்க முடியாது என்று தமிழ்நாடு அரசு பலமுறை அறிவித்திருக்கிறது. 1968 முதல் தமிழ், ஆங்கிலம் மட்டுமே தமிழ்நாட்டில் போதிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் இந்தி திணிப்பு தவிர்க்கப்பட்டு வருகிறது. அதேபோல, புதிய கல்விக் கொள்கையின்படி 5+3+3+4 கல்வித் திட்டத்தை தமிழ்நாடு ஏற்றுக் கொண்டால் இங்கே அமலில் உள்ள கல்வி நடைமுறை கடுமையாக பாதிக்கும். மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையின்படி 3 வயதான குழந்தைகளை பள்ளியில் சேர்க்க வேண்டுமென கூறுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் பெரும்பாலானவர்கள் கிராமப்புறத்தை சேர்ந்தவர்களாக இருப்பதால் 5 அல்லது 6 வயதில் தான் பள்ளியில் சேர்க்கப்படுகிற நிலை இருக்கிறது. தமிழ்நாட்டின் மொத்த சேர்க்கை விகிதம் 51.4 சதவிகிதமாக இருந்து சாதனை படைத்து வருகிறது. ஆனால், தேசிய சராசரி 27.1 சதவிகிதமாக இருக்கிறது. இந்தியாவில் உள்ள 38 மாநிலங்களில் 18 மாநிலங்கள் தேசிய சராசரியை விட குறைவாக இருக்கும்போது மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. சமக்ரா சிக்ஷா அபியான் கல்வித் திட்டத்திற்கு நிதி மறுக்கப்படுவதால் 43.9 லட்சம் மாணவர்கள், 2.21 லட்சம் ஆசிரியர்கள், 32,701 அலுவலர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தாலும் பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் இவர்களுக்கான செலவை தமிழ்நாடு அரசு பட்ஜெட் மூலம் ஈடுகட்டி வருகிறது. இப்பிரச்சினை இரு அரசியல் கட்சிகளுக் கிடையேயான பிரச்சினை அல்ல. இது மாநிலம் சம்மந்தப்பட்ட பிரச்சினையாகும். இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மத்திய அரசு அணுகுவது பா.ஜ.க.வின் எதேச்சதிகார போக்கையே காட்டுகிறது. தமிழ்நாட்டின் கல்வித்துறையை வஞ்சிப்பது போலவே, காவிரி டெல்டா விவசாயிகளிடமிருந்து அரசு நெல் கொள்முதலில் ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை தமிழ்நாடு அரசு முன்வைத்ததும் மத்திய அரசின் வல்லுநர் குழு டெல்டா மாவட்டங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்தது. ஆனால், இதுவரை இதுகுறித்த எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை. சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு நிதி மறுப்பு, கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டங்களுக்கு 20 லட்சம் மக்கள் தொகை இல்லையென்று பொருந்தாத காரணத்தை கூறி மத்திய அரசு நிராகரித்து விட்டது. இத்தகைய தமிழ்நாட்டை வஞ்சிக்கிற போக்கு தொடருமேயானால் அதற்குரிய விளைவுகளை மத்திய பா.ஜ.க. அரசு சந்திக்க நேரிடும் என எச்சரிக்க விரும்புகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.”,

# தேர்வர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு படிக்க ஓராண்டு தேர்வுக்கான கால அட்டவணை வெளியிட்டது டிஎன்பிஎஸ்சி: குரூப் 4 தேர்வு அறிவிப்பு அக்.6ம் தேதி வெளியாகும்

சென்னை: டிச.5–

ஓராண்டு தேர்வுக்கான கால அட்டவணையை டிஎன்பிஎஸ்சி நேற்று வெளியிடப்பட்டது. அதில் பல லட்சம் பேர் எழுதக்கூடிய குரூப் 4 தேர்வு அறிவிப்பு அக்டோபர் 6ல் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தமிழக அரசு துறைகளில் குரூப் 1, குரூப் 2, குரூப் 2 ஏ, குரூப் 4 உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பி வருகிறது. ஓராண்டில் எந்தெந்த பணிகளுக்கு என்னென்ன தேர்வுகள் நடத்தப்படும், அதற்கான அறிவிப்பு எப்போது வெளியாகும், தேர்வு எப்போது நடத்தப்படும், தேர்வு முடிவுகள் எப்போது வெளியாகும் ஆகிய விவரங்கள் அடங்கிய ஓராண்டு தேர்வு கால அட்டவணையை டிஎன்பிஎஸ்சி ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. இது தேர்வர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு படிப்பதற்கு உதவியாக இருந்து வருகிறது.

அதன்படி, வரும் 2026ம் ஆண்டுக்கான ஓராண்டு தேர்வு கால அட்டவணை எப்போது வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு தேர்வு எழுதுவோர் இடையே நிலவி வந்தது. இந்த நிலையில் 2026ம் ஆண்டுக்கான ஓராண்டு தேர்வு அட்டவணையை www.tnpsc.gov.in என்ற இணையதளத்தில் டிஎன்பிஎஸ்சி நேற்று வெளியிட்டது. அதில் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப சேவைகள் பணிகளுக்கான தேர்வு குறித்த அறிவிப்பு அடுத்த ஆண்டு (2026) மே மாதம் 20ம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஆகஸ்ட் 3ம் தேதி தேர்வு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரூப் 1 பணியிடங்களுக்கான அறிவிப்பு அடுத்த ஆண்டு ஜூன் 23ம் தேதி வெளியிடப்படும் என்றும், தேர்வு செப்டம்பர் 6ம் தேதி நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. குரூப் 2, 2ஏ பணியிடங்களுக்கான அறிவிப்பு ஆகஸ்ட் 11ம் தேதி வெளியிடப்பட்டு, அக்டோபர் 25ம் தேதி தேர்வு நடத்தப்படும். பல லட்சம் பேர் விண்ணப்பிக்கக்கூடிய குரூப் 4 பணியிடங்களுக்கான அறிவிப்பு அக்டோபர் 6ம் தேதி வெளியாகிறது. தேர்வு டிசம்பர் 20ம் தேதி நடத்தப்படஉள்ளது. இதேபோல், ஒருங்கிணைந்த தொழில்நுட்ப சேவைகள் பணிகளுக்கும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# வரும் டிசம்பர் 12ம் தேதி முதல் விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தகவல்

சிவகாசி : டிச.5–

சிவகாசியில் நடைபெற்ற மேயர் சங்கீதா இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், வரும் டிசம்பர் 12ஆம் தேதி முதல் விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். மேலும் அவர் பேசுகை யில், “கடந்த இரண்டரை ஆண்டுகளாக 1.15 கோடி பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பெண்கள் முன்னேற்றத்திற்காக தமிழக அரசு தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் தடைகளையும் தாண்டி தமிழகம் வளர்ச்சி பாதையில் சென்று கொண்டிருக்கிறது. தற்போதைய சூழலில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் மூலம் பெறப்பட்ட லட்சக்கணக்கான மனுக்கள் மீது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 27 மாதங்களாக ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படுகிறது. இந்த மாதம்12ம் தேதி முதல் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். பெண்கள் விடுதலைக்காக முதன்முதலில் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார். பெரியாரின் சிந்தனைகளை சட்டமாக்கியவர்கள் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தது முத்தமிழறிஞர் கலைஞர். இந்தியாவில் முதன்முதலில் தமிழகத்தில் பெண் காவலர்களை நியமித்ததே கலைஞர்தான். தற்போது மகளிர் கட்டணமில்லா மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமை தொகை உள்ளிட்ட மகளிர் வளர்ச்சி திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக அரசு கொண்டு வந்துள்ளது,”இவ்வாறு தெரிவித்தார்.

# அரியலூர் திமுக அரசு கொடுத்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினரை போலீசார் கைது செய்தனர்









அரியலூர், டிச.5–

அரியலூர் அண்ணா சிலை அருகில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் பல்வேறு அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட வேண்டும் நகராட்சி பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் செயலாளர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டும் நெடுஞ்சாலை துறையில் பணியாற்றும் சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர் அப்பொழுது திடீரென அரசு ஊழியர் சங்கத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டு தேர்தல் அறிக்கையில் திமுக அரசு கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என கோஷங்களை எழுப்பினர் அப்போது பாதுகாப்பிற்கு நின்றிருந்த போலீசார் சாலை மறியலில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அரசு ஊழியர் சங்கத்தினரை கைது செய்து தனியார் மண்டபத்தில் சிறை வைத்தனர்

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421